


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.9.2025) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் உள்ள சிப்காட் குருபரபள்ளி தொழிற் பூங்காவில் அமைந்துள்ள டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் 2 விரிவாக்க திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கே. கோபிநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, சிப்காட் மேலாண்மை இயக்குநர் செந்தில்ராஜ், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் சி. தினேஷ் குமார், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் பிங்க் செங், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தாய்லாந்து நிறுவனத்தின் தலைவர் ஜேம்ஸ் NG, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தைவான் நிறுவனத்தின் துணைத் தலைவர் மார்க் கோ, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் தலைவர் பென்ஜமின் லின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.9.2025) கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் உள்ள சிப்காட் குருபரபள்ளி தொழிற் பூங்காவில் அமைந்துள்ள டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் 450 கோடி ரூபாய் முதலீட்டில் 400க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 2 விரிவாக்க திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, ஒரு புதிய மேம்படுத்தப்பட்ட உற்பத்தி வரிசையையும் தொடங்கி வைத்து, ஆலையை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கே.கோபிநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, சிப்காட் மேலாண்மை இயக்குநர் செந்தில்ராஜ், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் சி. தினேஷ் குமார், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் பிங்க் செங், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தாய்லாந்து நிறுவனத்தின் தலைவர் ஜேம்ஸ் NG, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தைவான் நிறுவனத்தின் துணைத் தலைவர் மார்க் கோ, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் தலைவர் பென்ஜமின் லின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### டெல்டா எலக்ட்ரானிக்ஸ் – தமிழ்நாடு அரசுக்கு இடையேயான கூட்டு முயற்சி

# தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வலு சேர்க்கும்!

## ஒசூரில் – டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் 2 புதிய விரிவாக்க திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**ஓசூர், செப். 13 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.9.2025) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் உள்ள சிப்காட் குருபரபள்ளி தொழிற் பூங்காவில் உள்ள டெல்டா எலக்ட்ரானிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் 2 புதிய விரிவாக்க திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, மேம்படுத்தப்பட்ட புதிய உற்பத்தி வரிசையை தொடங்கி வைத்து, ஆற்றிய உரை வருமாறு:-**

இன்று காலையில், முதலீட்டாளர் மாநாட்டில் பங்கேற்றுவிட்டு, இந்த நிகழ்ச்சிக்கு நாங்கள் வந்திருக்கிறோம்.

பிங்க் செங் அவர்களே! எலக்ட்ரானிக்ஸ் துறையில், உங்களின் அளப்பரிய பங்களிப்பால், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம், உலகளவில் முன்னணி நிறுவனமாக உயர்ந்க்கிறது. இந்த வெற்றிச் சாதனைக்கு முதலில் என்னுடைய வாழ்த்துகளையும்! பாராட்டுகளையும்! நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஓசூர் பகுதியின் தொழில்வளர்ச்சியில், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் அளிக்கும் பங்களிப்புக்கு நான் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன்! இப்படிப்பட்ட உங்கள் கம்பெனியின், New Delta Smart Manufacturing Unit தொடங்கப்படுவதும் – புதிய விரிவாக்கமும் எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது!

இந்தியாவின் முன்னணி Electronics Production and Export மையமாக தமிழ்நாடு விளங்குகிறது. டெல்டா எலக்ட்ரானிக்ஸ் மற்றும் தமிழ்நாடு அரசுக்கு இடையேயான நம்முடைய கூட்டுமுயற்சி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வலுசேர்க்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த நேரத்தில் உங்களிடம் நான் கேட்டுக்கொள்வது, இதன் அடுத்தகட்டமாக, தமிழ்நாட்டின் மத்திய மற்றும் தென் மாவட்டங்களிலும் உங்களின் விரிவாக்க திட்டங்களை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டின் திறன்வளத்தை கருத்தில் கொண்டு, ஒரு R&D Centreயை நீங்கள் சென்னையிலும், கோவையிலும் அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் நீங்கள் மேற்கொள்ளும் தொழில் முயற்சிகளுக்கு தேவையாயான எல்லா உதவிகளையும் எங்கள் திராவிட மாடல் அரசு முழுமையாக வழங்கும் என்று உறுதியளித்து இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### மண்–மொழி–மானம் காக்க தமிழ்நாட்டின்

# ஒரு கோடிக்கும் மேலான குடும்பங்களை ஓரணியில் திரட்டியுள்ளோம்!

## அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி – துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. பேட்டி!





**சென்னை, செப். 13 -**

**மண்-மொழி-மானம் காக்க தமிழ்நாட்டின் ஒரு கோடிக்கும் மேலான குடும்பங்களை ஓரணியில் திரட்டியுள்ளோம்! என்றும் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பின் அடுத்த கட்டமாக 'தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டோம்' என்ற முழக்கத்தை முதலமைச்சர் முன்வைத்துள்ளார்! என்றும் தெரிவித்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, துணை பொதுச் செயலாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா மற்றும் தலைமைக் கழக நிர்வாகிகள் செய்தியாளர்களைச் சந்தித்தது குறித்த செய்தி அறிக்கை வருமாறு :-**

தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்கவும்; ஒன்றிய அரசால் நடத்தபடுகின்ற கூட்டாட்சி தத்துவத்தின் படுகொலைக்கு எதிரான எதிராகவும்; நீட் தேர்வானாலும், தமிழர்களுடைய பண்பாடு பிரச்சனைகளை சிதைக்கின்ற கீழடி பிரச்சனையாக இருந்தாலும், மாநிலத்திற்கு வர வேண்டிய நிதிபங்கீடாக இருந்தாலும், புதிய கல்விக் கொள்கையாக இருந்தாலும் எல்லா தளங்களிலும் தமிழ்நாட்டின் உரிமைகளை பறிக்கின்ற, காலச்சாரத்தை பறிக்கின்ற, மான உணர்வுகளை சிதைக்கின்ற ஒன்றிய அரசுக்கு எதிராகவும் இது வரை இந்தியாவில் எந்த அரசியல் கட்சி தலைவரும் எடுக்காத ஒரு முயற்சியை முதலமைச்சர் அவர்கள் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற பெயரில், தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு இல்லத்திற்கும் சென்று மண், மொழி, மானம் காப்பதற்காக ஓரணியில் வரவேண்டும் என முயற்சியை எடுத்தார்கள்.

அது ஜூலை 1 ஆம் தேதி தொடங்கியது, திமுகவின் 7 லட்சம் தொண்டர்கள் அந்த பணியில் ஈடுபட்டனர்; இந்த 70 நாட்களில் தமிழ்நாட்டில் இருக்கின்ற 68,000 வாக்குச்சாவடிகளிலும் சென்று ஓரணியில் தமிழ்நாடு என்ற முழக்கத்தோடு இந்த முன்னெடுப்பின் முதற்கட்டத்தை திமுக வெற்றிகரமாக முடித்துள்ளது.

தமிழ்நாடு முழுக்கவும் ஒரு கோடிக்கும் மேலான குடும்பங்கள் இணைந்துள்ளன.

இரண்டாவது கட்டமாக வருகின்ற செப்டம்பர் 15 ஆம் தேதி மண், மொழி, மானம் காக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் இக்குடும்பங்கள் உறுதி மொழியை முன்மொழிய உள்ளன.

அந்த உறுதிமொழிகளை தலைமை கழகத்திற்கு அனுப்பி அவற்றை தொகுத்து, அடுத்த கட்டமாக நமது தலைவர் அவர்கள் 17-ஆம் தேதி கரூரில் நடைபெறவிருக்கின்ற முப்பெரும் விழாவில் அந்த உறுதிமொழியை லட்சக்கணக்கான மக்களின் முன்பாக நிறைவேற்றுவார்கள்.

அடுத்த கட்டமாக செப். 20, 21 ஆகிய தேதிகளில் திமுக சார்பில் கழக மாவட்ட அளவில் ஓரணியில் தமிழ்நாடு உறுதிமொழியை வழிமொழிந்து தமிழ்நாடு முழுக்க தீர்மான விளக்க பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளது.

அந்தக் கூட்டங்களில் அரசியல் கட்சிகளை தாண்டி பொதுமக்கள் , வணிகர்கள், வர்த்தகர்கள், பெண்கள் என அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு உறுதி மொழியை ஏற்பர்.

'தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டோம்' என்ற பிரகடனத்தை தமிழ்நாடு முழுக்க கொண்டு செல்வதற்காக ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் லட்சக் கணக்கான மக்கள் பங்கு பெறும் அளவில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

இப்படிப்பட்ட ஒரு நிகழ்வினை இந்தியாவில் எந்த ஒரு அரசியல் கட்சியும் செய்தது இல்லை என்ற அளவிற்கு மூன்று கட்டங்களாக, 70 நாட்களுக்கு முன்னால் தொடங்கிய இந்த இயக்கம் பல்வேறு பரிமாணங்களைக் கடந்து, தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய அனைவரையும் ஒன்றிணைக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதனை வெற்றிகரமாக நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

இப்படி முயற்சியை இதுவரை இந்திய அரசியலில் எந்த ஒரு அரசியல் கட்சியும் எடுக்கவில்லை என்பது அதன் சிறப்பு.

ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் இதுவரை ஒரு கோடிக்கும் மேலான குடும்பங்களை இணைத்துள்ளோம்.

தன்னுடைய இயலாமையால் 'ஓரணியில் தமிழ்நாடு' குறித்து எடப்பாடி பழனிசாமி விமர்சிக்கிறார். அ.தி.மு.க., பா.ஜ.க.விடம் மண்டியிட்டு விட்டது. தமிழ்நாட்டையே பா.ஜ.க.விடம் அடகு வைக்கத் துடிக்கின்றார்கள்.

இவ்வாறு ஆ. இராசா எம்.பி. கூறினார்.

### ஆசிரியர் தகுதித் தேர்வு தொடர்பாக உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக

# தமிழ்நாடு அரசு மறு ஆய்வு மனு விரைவில் தாக்கல்!

## பள்ளிக் கல்வித்துறை அறிவிப்பு!

சென்னை, செப்.13-

ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) தொடர்பாக உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை சார்பில் மறு ஆய்வு மனு விரைவில் தாக்கல் செய்யப்படுகிறது.

இது தொடர்பாக வெளியான செய்திக்குறிப்பு வருமாறு:-

உச்சநீதிமன்றம் அன்ஜுமன் இஷாத்-இ-தாலீம் டிரஸ்ட் vs மகாராஷ்டிரா மாநிலம் & மற்றவர்கள் 01.09.2025 அன்று வழக்கில் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக தமிழ்நாடு அரசு மறுஆய்வு மனுவை தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளது.

இத்தீர்ப்பின் படி, ஆசிரியர் தகுதித் தேர்வில் (TET) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற தகுதியை அடையாத அனைத்து பணியில் உள்ள ஆசிரியர்களும், ஆசிரியர் தகுதித் தேர்வில் இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதைச் செய்யத் தவறினால், அவர்கள் கட்டாய ஓய்விற்கு உட்படுத்தப்பட்டு, ஓய்வூதிய பலன்களுடன் மட்டுமே நீங்க வேண்டியிருக்கும்.

மேலும், ஐந்து ஆண்டுகள் பணிக் காலம் மட்டுமே மீதமுள்ள ஆசிரியர்கள், அவர்கள் ஓய்வு பெறும் நாள் வரை தொடர அனுமதிக்கப்பட்டாலும், பதவி உயர்விற்கு தகுதியற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

தமிழ்நாடு அரசு, ஆசிரியர்களின் தரம் தொடர்ந்து மேம்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கையையும், எதிர்கால நியமனங்களுக்கு TET ஒரு கட்டாய தகுதியாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டையும் முழுமையாக ஆதரிக்கிறது. இருப்பினும், ஏற்கனவே பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு இதை பின்பற்றும்படி பிந்தைய தேதியிலிருந்து (retrospective) விதிப்பது கடும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் அவர்களுடைய நியமனத்தின் போது நடைமுறையில் இருந்த சட்டங்களும், விதிகளும், நடைமுறைகளும் பின்பற்றப்பட்டே பணியமர்த்தப்பட்டனர். பல ஆண்டுகள் கழித்து புதிய தகுதி நிர்ணயித்து, கட்டாய ஓய்வு அச்சுறுத்தலை அளிப்பது நியாயமற்றதும் நிலைத்தன்மை யற்றதுமாகும்.

இந்தத் தீர்ப்பு நடைமுறைக்கு வந்தால், பெருமளவிலான கட்டாய ஓய்வுகள் ஏற்பட்டு, தமிழ்நாடு முழுவதும் பள்ளிகளில் கடுமையான ஆசிரியர் பற்றாக்குறை உருவாகும். குறுகிய காலத்தில் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் TET தகுதி பெற்ற ஆசிரியர்களை நியமிக்கவோ, அல்லது ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கவோ இயலாது. இதன் விளைவாக, இலட்சக்கணக்கான மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும், வகுப்பறை கற்பித்தல் தடைபடும், மேலும் பள்ளிக் கல்வி அமைப்பில் நிலையற்ற தன்மை ஏற்படும் அபாயம் உள்ளது.

தமிழ்நாடு அரசு தாக்கல் செய்யும் மறுஆய்வு மனு பின்வரும் முக்கிய காரணங்களின் அடிப்படையில் உள்ளது:

- 2009-ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் (RTE Act) பிரிவு 23இன் படியான குறைந்த பட்ச தகுதிகள் புதிய நியமனங்களுக்கு மட்டுமே பொருந்துகிறது. ஏற்கனவே பணியில் உள்ள ஆசிரியர்களை கட்டாய ஓய்வு பெறச் செய்வதற்கான அதிகாரத்தை இது வழங்கவில்லை.
- 23 ஆகஸ்ட் 2010 அன்று NCTE வெளியிட்ட அறிவிப்பு, முதன்முதலில் TETஐ அறிமுகப்படுத்தியது. அதில், அந்த தேதிக்குப் பிறகு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கே இது பொருந்தும் என்றும், முன்பே நியமிக்கப்பட்டவர்களுக்கு இது பொருந்தாது என்றும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.
- TETஐ பிந்தைய தேதியிலிருந்து (retrospective) அமல்படுத்துவது, சட்டபூர்வமாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் உரிமைகளை பாதிப்பதோடு, மேலும், கல்வி அமைப்பின் நிலைத்தன்மையையும் அச்சுறுத்துகிறது.

கல்வித் தரம் மற்றும் ஆசிரியர்களுக்கான நீதி ஆகிய இரண்டையும் உறுதி செய்வதில் தமிழ்நாடு அரசு உறுதியாக உள்ளது. மறுஆய்வு மனு, பணியில் உள்ள ஆசிரியர்களின் வாழ்க்கைமுறை மற்றும் சேவை உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் சமநிலையை நிலைநிறுத்துவதோடு, எதிர்கால நியமனங்களுக்கு TETஐ கட்டாயமாக கடைப்பிடிக்க வைக்கும் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது.

இந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய உச்சநீதிமன்றத்தை அணுக அரசு உத்தேசித்துள்ளது. இது சட்ட, அரசியல் அடிப்படைகளுடன் மட்டுமல்லாமல், மாநிலம் முழுவதும் உள்ள மாணவர்களின் எதிர்காலத்தையும் உள்ளடக்கிய பிரச்சினை என்பதால், அரசு தீர்ப்பினை மறுபரிசீலனை செய்ய வலியுறுத்தி தன் மனுவை சமர்ப்பிக்க உள்ளது.

தமிழ்நாடு அரசு, ஆசிரியர் சமூகத்துடன் உறுதியாக நிற்கிறது என்ற நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. ஆசிரியர்களின் நலன்கள் காக்கப்பட்டு, ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வி பெறும் உரிமை பாதுகாக்கப்படும் வகையில், இந்நேர்வில் நியாயமான மற்றும் முழுமையான தீர்வினை பெறும் வகையில் அரசு தீவிரமாக செயல்படும்.



கரூர் கோடங்கிபட்டியில் நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழா மைதானத்தில் நடைபெற்று வரும் விழா ஏற்பாடுகளை கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ.ஆகியோர் பார்வையிட்டனர். அருகில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, பேரூர், செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் உள்ளனர்.